**ஜூலை – 09**

# TNPSC துளிகள்

- சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையில் வடிவமைப்பு விதிமீறல்கள் காரணமாக இந்தியாவின் முதலாவது மித அதிவிரைவு இரயிலான “வந்தே பாரத்” விரைவு இரயிலின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.
- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் எம். வெங்கய்யா நாயுடு “விவேகாதீபினி” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இது முதலில் 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தத்துவவியலாளர் மற்றும் இறையியலாளரான ஆதி சங்கராச்சாரியாவால் எழுதப்பட்டது.
    - இவர் அத்வைதா வேதாந்தா தத்துவத்தைத் தொகுத்தார்.
- இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் ராகுல் டிராவிட் பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## மாநிலங்களவையில் ஜெய்சங்கர்

- இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரான டாக்டர் S. ஜெய்சங்கர் மாநிலங்களவையின் உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுத்தார்.
- இவர் குஜராத்திலிருந்து மாநிலங்களவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- நாடாளுமன்றத்தின் உறுப்பினராவதற்குரிய தகுதி நிலைகள் இந்திய அரசியலமைப்பின் 84-வது விதியில் கூறப்பட்டுள்ளன.
- 1977வது ஆண்டைச் சேர்ந்த இந்திய அயல்நாட்டுப் பணி அதிகாரியான சுப்பிரமணியம் ஜெய்சங்கர் 2017 ஆம் ஆண்டில் சீனாவுடன் ஏற்பட்ட டோக்லாம் மோதல்களுக்குத் தீர்வு காண்பதில் முக்கியப் பங்காற்றினார்.
- மேலும் இவர் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையே முக்கிய ஒப்பந்தமான அணு ஆயுத ஒப்பந்தம் குறித்த சமரசப் பேச்சுவார்த்தையிலும் பங்கு கொண்டிருந்தார்.

## மழை நீர் சேகரிப்புப் பிரிவு

- ஜல் சக்தி அபியான் பிரச்சாரத்தின் முதல் நிலையின் ஒரு பகுதியாக (ஜூலை 01 – செப்டம்பர் 15), நகர நீர்ப் பாதுகாப்பிற்கான வழிகாட்டுதல்களை மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இது மழைநீர் சேகரிப்பைக் கண்காணிப்பதற்காக ஒரு பிரிவை அமைக்குமாறு நாட்டில் உள்ள அனைத்து நகராட்சி அமைப்புகளையும் கேட்டுக் கொண்டுள்ளது.
- இந்தப் பிரிவானது நிலத்தடி நீர் உறிஞ்சப்படும் அளவு மற்றும் நிலத்தடி நீர் அதிகரிப்பு

ஆகியவற்றைக் கண்காணித்து, இதன் தரவுகளை முக்கியமான பொது வெளிகளில் காட்சிப்படுத்த வேண்டும்.

## சுதர்சன் நடவடிக்கை

- ஜூலை 01 அன்று "சுதர்சன் நடவடிக்கை" என்ற பெயர் கொண்ட ஒரு மிகப்பெரிய நடவடிக்கையை எல்லைப் பாதுகாப்புப் படை (BSF - Border Security Force) தொடங்கியுள்ளது.
- இது இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் 1000 கிலோ மீட்டர் தொலைவுள்ள சர்வதேச எல்லைப் பகுதி முழுவதையும் உள்ளடக்கவுள்ளது.
- ஜம்மு 485 கிலோ மீட்டர் தொலைவையும் பஞ்சாப் 553 கிலோ மீட்டர் தொலைவையும் இராஜஸ்தான் மற்றும் குஜராத் ஆகியவை இதர தொலைவையும் பாகிஸ்தானுடன் பகிர்ந்துள்ளன.
- BSF ஆனது இந்தப் பகுதியின் "முதல் நிலைப் பாதுகாவலராக" செயல்படும் முதன்மைப் பாதுகாப்புப் படையாகும்.
- BSF குறித்து மேலும் தெரிந்து கொள்ள இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/52nd-raising-day-of-bsf-observed-1-december/.

## காஷ்மீர் முதலீட்டாளர்கள் மாநாடு

- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் ஸ்ரீ நகர் மற்றும் ஜம்மு ஆகிய பகுதிகளில், தனது முதலாவது முதலீட்டாளர் மாநாட்டை ஜம்மு காஷ்மீர் மாநிலம் நடத்தவிருக்கின்றது.
- சுற்றுலாவுடன் சேர்த்து, தோட்டக் கலை மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவற்றுடன் சேர்த்து மின்சக்தி மற்றும் உற்பத்தித் துறை ஆகியவற்றிலும் கூடுதல் கவனம் இங்கு செலுத்தப்படவிருக்கின்றது.

## படேல் சிலை அருகே நடைபெறவிருக்கும் கருத்தரங்கு

- முதன்முறையாக வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் வருடாந்திர திட்டத் தலைவர்களின் கருத்தரங்கானது குஜராத்தின் நர்மதை மாவட்டத்தில் உள்ள படேலின் ஒற்றுமைக்கான சிலை அருகே நடைபெறவிருக்கின்றது.
- இது வெளிநாடுகளில் இந்தியாவின் நலன்களைக் ஊக்கப்படுத்துவதற்காகப் பணியாற்றும் இந்தியாவின் அனைத்துத் தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள் கூடுவதாகும்.
- மாநிலக் காவல்துறை பொது இயக்குநர்களின் வருடாந்திரக் கருத்தரங்கு இதே இடத்தில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்றது.
- "சர்தார் வல்லபாய் படேல்" இந்தியாவின் பிஸ்மார்க் என்று அழைக்கப்படுகின்றார்.

# சர்வதேசச் செய்திகள்

## ஐந்து கண்கள் (Five Eyes) திட்டம்

- சீனத் தொலைத்தொடர்புத் துறை நிறுவனமான ஹவாய் நிறுவனத்தின் சாதனங்கள் அல்லது சேவைகளை ஐந்து கண்கள் (Five Eyes) எனப்படும் நாடுகள் பயன்படுத்தினால், அந்நாடுகளுடன் பகிரப்பட்டு வரும் நுண்ணறிவுத் தரவுகள் நிறுத்தப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.
- ஐந்து கண்கள் என்ற பெயரானது நுண்ணறிவு ஆவணங்களின் பாதுகாப்பு வகைப்பாட்டைக் குறிக்கும். அந்த நாடுகள் பின்வருமாறு
    - ஆஸ்திரேலியா
    - கனடா
    - நியூசிலாந்து
    - ஐக்கியப் பேரரசு
    - அமெரிக்கா
- இந்தத் திட்டமானது அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளுக்கிடையே நுண்ணறிவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக 1946 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அதன் பின் பிற நாடுகள் இத்திட்டத்தில் இணைந்தன.
- பனிப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்த நாடுகள் இரஷ்யாவை உளவு பார்த்தன. 9/11 இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்பு, இந்த நாடுகள் சர்வதேசத் தீவிரவாதிகளையும் கண்காணிக்கின்றன.

## சித்திரவதைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மீதான ஐக்கிய நாடுகள் தீர்மானம்

- சமீபத்தில் ரோமானியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச் சபைத் தீர்மானம் மீதான ஒட்டெடுப்பிலிருந்து இரஷ்யா மற்றும் இதர 42 நாடுகளுடன் இணைந்து இந்தியா வெளியேறியுள்ளது.
- இந்தத் தீர்மானம் தூக்குத் தண்டனை மற்றும் சித்திரவதை ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களின் வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான வழிகள் குறித்து ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியா ஒட்டெடுப்பிலிருந்து வெளியேறியதற்கான காரணங்கள் பின்வருமாறு
    - இது இந்தியாவில் “அரிதிலும் அரிதான” வழக்குகளில் மட்டும் தூக்குத் தண்டனை வழங்க அனுமதிக்கும் இந்தியச் சட்டத்திற்கு எதிராக உள்ளது.
    - தூக்குத் தண்டனையை சித்திரவதைக்கு இணையாக வைப்பதற்கான முயற்சியின் காரணமாக இந்த ஒட்டெடுப்பில் இருந்து இந்தியா விலகியுள்ளது.

## இலங்கையில் உள்ள மாதிரிக் கிராமம்

- மாதிரிக் கிராமங்கள் திட்டத்தின் கீழ் இந்தியாவின் நிதியுதவியுடன் கட்டப்பட்டுள்ள முதலாவது மாதிரிக் கிராமம் இலங்கையின் காம்பஹாவில் உள்ள ராணிடுகாமாவில்

தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- இது போரின் போது இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்காகத் தொடங்கப்பட்ட வீட்டுவசதித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்தியா தலா 2400 வீடுகளுடன் இது போன்ற 100 மாதிரி கிராமங்களைக் கட்டமைக்கத் திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவின் பங்களிப்பில் இலங்கையின் மாத்தராவில் உள்ள ருஹுனா பல்கலைக் கழகத்தில் உள்ள மிகப்பெரிய பல்கலைக்கழக அரங்கமும் அடங்கும்.

# பொருளாதாரச் செய்திகள்


## அரசு உரிமை பெற்ற தங்கப் பத்திரங்கள்

- 2019 ஆம் ஆண்டு ஜூலை 08 அன்று தொடங்கவிருக்கும் அரசு உரிமை பெற்ற தங்கப் பத்திரங்களின் (SGB - Sovereign Gold Bonds) புதிய தொகுதிக்கான விலையை கிராமிற்கு ரூ. 3443 ஆக அரசு நிர்ணயித்துள்ளது.
- 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட SGB திட்டத்தின் கீழ் உள்ள பத்திரங்கள் தங்கத்தின் ஒரு கிராம் அலகில் குறிக்கப்பட்ட பத்திரங்களாகும்.
- ஒரு நிதியாண்டில் ஒரு நபருக்கு பத்திரங்களின் மீதான குறைந்தபட்ச முதலீட்டு வரம்பு 1 கிராம் மற்றும் அதிகபட்ச முதலீட்டு வரம்பு 500 கிராம் ஆகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பெரிலியம் – 7 என்ற கதிரியக்கச் சிதைவு அணுக் கருவைப் பயன்படுத்திப் பருவமழை கணிப்பு

- பெல்ஜியம் அணுக்கரு ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த லுக்ரிசியா டெர்சி என்பவர் சிக்கலான இந்தியப் பருவ மழையைக் கணிப்பதற்கு அணுக்கரு வெடிப்புகளை கண்டறிவதற்கான சாதனங்களின் தரவுகளைப் பயன்படுத்தியுள்ளார்.
- விரிவான அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்த அமைப்பின் (CTBTO - Comprehensive Test Ban Treaty Organisation) கீழ் உள்ள சர்வதேச கண்காணிப்பு அமைப்பு நிலையங்கள் வளிமண்டலத்தின் கதிரியக்கச் சிதைவு அணுக்கருவின் அளவைத் தொடர்ந்து கண்காணிக்கின்றன.




- ❖ இவர் பருவமழையைக் கணிப்பதற்கு கதிரியக்கச் சிதைவு அணுக்கருவான பெரிலியம் 7-ன் அளவை அறிந்துக் கொள்வதற்காக இரஷ்யா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள CTBTOவின் தரவுகளைப் பயன்படுத்தியுள்ளார்.
- ❖ எப்பொழுதெல்லாம் பெரிலியம் 7 ஆனது ரஷ்யாவில் அதிகமாக உள்ளதோ, அப்பொழுதெல்லாம் பெர்லியம் 7ன் அளவு ஆஸ்திரேலியாவில் குறைவாக இருக்கும்.
- ❖ இரு நாடுகளின் தரவுகள் ஒன்றுக்கொன்று இணையும் புள்ளி "ஹெட்லி பெரல் குவிய மண்டலம்" (HFCZ - Hadley-Ferrel Convergence Zone) எனப்படும்.
- ❖ HFCZ ஐ பருவக்கால மழையுடன் தொடர்புபடுத்த முடியும்.
- ❖ இந்த முடிவு மூன்று நாட்கள் வித்தியாசத்துடன் (Error) இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே மிகத் துல்லியமாக பருவமழையைக் கணிக்கும்.

# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்டில் பசுமை வரி

- ❖ தங்களது மாநிலத்திற்கு வருகை தரும் "சுற்றுலாப் பயணிகளுக்கு" பசுமை வரி விதிக்க உத்தரகாண்ட் மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ இந்த வரியானது அந்தந்த இடத்தின் உள்ளூர் நகராட்சி அமைப்பினால் முடிவு செய்யப்படும்.
- ❖ இது பார்வையிடக்கூடிய சுற்றுலாப் பயணிகளால் எளிதில் பாதிக்கப்படும் சூழல் அமைப்புகளில் உற்பத்தியாகும் கழிவுகளை அகற்றுவதற்குப் பயன்படுத்தப்படும்.
- ❖ ஒவ்வொரு ஆண்டும் 8 இலட்சம் யாத்ரீகர்கள் உத்தரகாண்டிற்குப் பயணம் மேற்கொள்வர் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ முசோரி மற்றும் நைனிடால் ஆகிய இரண்டு நகரங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு "நுழைவு வரியை" விதிக்கின்றன.

## மிலாப் நடவடிக்கை – தில்லி காவல் துறை

- காணாமல் போன குழந்தைகளை மீட்பதற்காக "மிலாப்" என்ற ஒரு நடவடிக்கையை தில்லி காவல்துறையின் குற்றவியல் பிரிவு நடத்தியுள்ளது.
- இது காணாமல் போன 333 குழந்தைகளை தில்லியில் மீட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாழும் அந்தக் குழந்தைகளின் குடும்பத்தினரிடம் ஒப்படைத்துள்ளது.
- இந்தக் குழந்தைகள் 2019 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து காணாமல் போயுள்ளனர். அந்தக் குழந்தைகள் தில்லியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.
- தில்லி காவல் துறையின் ஆட்கடத்தல் தடுப்புப் பிரிவானது 2014 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

## மலை மருத்துவ நிறுவனம்

- ஆசியாவின் முதலாவது மலை மருத்துவம் மற்றும் மலையில் அதிக உயரத்தில் உள்ளவர்களை மீட்பதற்கான சிக்ஸ் சிக்மா நிறுவனத்தை ருத்திரபிரயாக் மாவட்டத்தில் அமைக்க உத்தரகாண்ட் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- மேலும் இந்த நிறுவனம் மலை மருத்துவத்தில் ஆயுதப் படைகள் மற்றும் துணை இராணுவப் படைகளுக்கும் பயிற்சி வழங்கவிருக்கின்றது.
- இது மாநிலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் புனிதப் பயணிகளுக்கு உயரமான பகுதிகளில் தேவையான மருத்துவ சேவையை அளிக்கவிருக்கின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஸ்பெயினின் மல்யுத்த கிராண்ட் பிரிக்ஸ்

- மல்யுத்த இறுதிப் போட்டியில் இந்தியாவின் முன்னணி மல்யுத்த வீராங்கனையான வினேஷ் போகாட் என்பவர் 53 கிலோ எடைப் பிரிவில் நெதர்லாந்தின் ஜெசிகா பிளாஸ்கா என்பவரை வீழ்த்தி, தனது முதலாவது தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- 68 கிலோ எடைப் பிரிவில் திவ்யா காக்ரன் என்பவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவரை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இந்தியா இத்தொடரில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இத்தொடரில் இரஷ்யா முதலிடத்தில் உள்ளது.

## FIFA மகளிர் உலகக் கோப்பை

- பிரான்சின் லியோனில் நடைபெற்ற 2019 ஆம் ஆண்டின் FIFA மகளிர் உலகக் கோப்பையை அமெரிக்கா வென்றுள்ளது.
- அமெரிக்கா 2 கோல்கள் அடித்து நெதர்லாந்தை வீழ்த்தியுள்ளது.

- 1930 ஆம் ஆண்டில் இத்தாலியின் விட்டோரியோ போசைவையடுத்து ஆண்கள் மற்றும் மகளிர் உலகக் கோப்பைகளில் தொடர்நது வெற்றிகளைக் குவித்து வரும் முதலாவது பயிற்சியாளர் ஜில் எலிஸ் ஆவார்.
- அமெரிக்க மகளிர் அணி இக்கோப்பையை 1991, 1999 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வென்றுள்ளது.

\- - - - - - - - - - - - - -